பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 12 கதிர் 412

# சிறு, நடுத்தர உற்பத்தியாளர்களை வடக்கில் வளர்க்க இந்தியா உதவும்

## துணைத் தூதர் ராகேஸ் தெரிவிப்பு




வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு இந்தியா உதவிகளைச் செய்யும் என யாழ்ப்பாண இந்திய துணை தூதுவர் ராகேஸ் நட்ராஜ் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் கலாச்சார மத்திய நிலையத்தில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இது கொண்டாட்டக் காலம். கிறிஸ்மஸ்வந்துபோய்விட்டது.அடுத்த ஆங்கிலப் புதுவருடம் வருகின்றது. பொதுவாகவே ஆண்டிறுதி என்றால் ஒரு கொண்டாட்ட மனோநிலை வந்துவிடும். அதனால்தான் யாழ். நகரத்தில் உள்ள சொகுசு விடுதிகளிலும்கூட கேளிக்கைக் களியாட்ட நிகழ்வுகள் மது விருந்துகளுடன்ஒழுங்குசெய்யப்பட்டு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன. இன்றையபொருளாதாரநிலையிலும் இவ்வாறு களியாட்டங்களில் ஈடுபடுபவர்கள் மிகச் சிலர்தான். அவர்கள் சில நூறுகளைக்கூடத் தாண்டமாட்டார்கள். அவர்களிலும் பலர் கொண்டாட்ட விரும்பிகள் என்பதைவிடவும்போதைவிரும்பிகள் என்றே சொல்லலாம். ☞ 2

## நீரில் மூழ்கிய விரிவுரையாளர் உயிரிழப்பு

அஹூங்கல்ல கடற்பரப்பில் மூழ்கி உயிருக்குப் போராடி வந்த பேராதனை பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் மூத்த விரிவுரையாளர் நேற்று உயிரிழந்தார்.

கலாநிதி புத்திக தசநாயக்க (வயது 44) டிசெம்பர் 16 அஹூங்கல்ல கடற்கரைக்குச் சென்றிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீரில் மூழ்கிய தசநாயக்க, அருகில் இருந்த சிலரால் மீட்கப்பட்டு ☞ 2

# வடக்கு கிழக்கு மீண்டும் இணைக்கப்படவேண்டும்

## நியூஸிலாந்து தூதுவரிடம் சம்பந்தன் நேரில் வலியுறுத்து



தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்படவேண்டும்என்று நியூஸிலாந்து தூதுவரிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர்இரா.சம்பந்தன்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வதேசத்துக்கு வழாங்கியவாக்குறுதிகள்மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்றும்வலியுறுத்திய அவர், இவை தொடர் பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம்கொடுக்க ☞ 2

## ஆழிப்பேரலை எச்சரிக்கைக்கான கோபுரங்களில் 75% செயலிழப்பு

### 77 இல் 57 ‘அவுட்’

ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கைக்காக நாட்டில் அமைக்கப்பட்ட 77 கோபுரங்களில் 57 கோபுரங்கள் செயலிழந்துவிட்டன.அவற்றைத் திருத்த எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்லண்டன் பிபிஸியின் சிங்கள சேவைஇந்தச்செய்தியை வெளியிட்டுள்ளது.

2004 ஆம் ☞ 2

## சூரிய மின் சக்தித் திட்டங்களினால் வடக்கின் சுற்றுலாத்துறை பாதிப்பு

### வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் குற்றச்சாட்டு

வடக்கில் அமைக்கப் படவுள்ள சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டங்கள் பெரும்பாலும் சுற்றுலா மையங்களிலும் எதிர்காலத்தில் சுற்றுலா மையங்களைஅமைக்கப் போதிய வளங்களைக் கொண்ட இடங்களிலும் உருவாக்கப்பட இருப்பதால் வடக்கின் சுற்றுலாத்துறைக்கு இது பேராபத்தாக மாறும். இந்த திட்டங்கள் முக்கிய சுற்றுலாப்பகுதிகளுக்கும் மட்டுமன்றி பருவக்காலத்துக்கு புலம் பெயர்ந்துவரும் ☞ 2

## போதகர் ஜெரோமின் விளக்கமறியல் நீடிப்பு

பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில்கருத்துவெளியிட்டார் என்றுகூறப்படும்போதகர் ஜெரோம் கிறிஸ்டோபர் பெர்னாண்டோவின் விளக்கமறியல்மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. அவர் ஜனவரி 3 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிகநீதிவான்திருமதி ரஜிந்த ஜயசூரிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஜெரோமின்சர்ச்சைக்குரிய பேச்சுக்கள் அடங்கிய சி.டியை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பவும் நீதிவான் உத்தரவிட்டார்.

ஜெரோமுக்கு எதிராகக்குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் வாதங்களை முன்வைத்ததுடன், கைதுசெய்யப்பட்ட ☞ 2

## பொலிஸ் வேட்டை மீண்டும் ஆரம்பம்



கிறிஸ்மஸ் கொண்டாட்டங் களையொட்டி 2 நாள்கள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டபொலிஸாரின் போதைப்பொருள்கைது வேட்டைநேற்றுமீண்டும் தொடங்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான ☞ 8

## தேர்தல் பரப்புரைகளை ஜனவரியில் தொடங்குகின்றன அரசியல் கட்சிகள்

அடுத்த ஆண்டு தேர்தல்என்றுஅறிவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, ஜனவரி மாதமே பரப்புரைகளைத் தொடங்குவதற்குக் கட்சிகள் திட்டமிட்டிருக்கின்றன. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக் கள் சக்தி உட்பட பல எதிர்க் கட்சிகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலே தமது பரப்புரைகளைத் தொடங்கத் தயாராகி வருகின்றன.

எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் என்பதுஉறுதியாக ☞ 8

## புதிய அலைபேசி வாங்க முன்னர் செய்யவேண்டியது...

புதிய அலைபேசி (மொபைல் ஃபோனை) வாங்குவதற்கு முன் அது தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள்தங்கள் கைத்தொலைபேசிகளை வாங்கும் போது அவற்றின் பதிவைச் சரிபார்க்குமாறு சபையின் நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் பொது விழிப்புணர்வு பிரதிப் பணிப்பாளர் மேனகாபத்திரனகேட்டுக் கொண்டுள்ளார்.

IMEI <Space> (புதிய தொலைபேசியின் 15 இலக்க IMEI எண்) என தட்டச்சு செய்து 1909க்கு SMS அனுப்புவதன் மூலம் அந்த அலைபேசி தொலைக் தொடர்பு ஒழுங்குபடுத்தல் சபையில்பதிவுசெய்யப்பட்டள்ளதாஎன்பதைநுகர்வோர் சரிபார்க்க முடியும் என்று பத்திரனே கூறினார்.

அலைபேசி ☞ 2

## இரட்டைக் கொலை சந்தேகநபர் சம்பவத்திற்கு முன்னரே கைது

### துப்பாக்கி, தோட்டாக்களும் மீட்பு என அறிவிப்பு

இருவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஹினடியன மஹேஷ் என்ற பாதாள உலகத் தலைவரின் சகா ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் ஒழிப்புக்கான 'யுக்திய' நடவடிக்கையின் கீழ் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரின் பெயர் விவரங்களைப் ☞ 2

## கதிர்காம ஆலய அறங்காவலர் கைதாகி பிணையில் விடுவிப்பு

கதிர்காமம் தேவாயலத்திற்கு வழாங்கப்பட்ட தங்கத் தட்டு ஒன்று காணாமற்போனமை தொடர்பில் ஆலயத்தின் தலைமைப் அறங்காவலரான ரி.சோமபால ரத்நாயக்க கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தங்கத் தட்டுக் காணாமற்போனமை தொடர்பில்அறங்காவலர் தேடப்பட்டு வந்த நிலையில்அவர் நேற்று பொலிஸாரிடம் சட்டத்தரணி ஊடாகச்சரணடைந்தார். அவரைக் கைது செய்த பொலிஸார்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேகநபரைத் தலா 500,000 ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும், ஒவ்வொரு ☞ 2

## லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவை நியமிப்பதில் தொடரும் இழுபறி

இலஞ்சம் அல்லது ஊழல்குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது கடந்த ஒரு மாத காலமாகத் தாமதமாகி வருகின்றது என்று கூறப்படுகின்றது. இந்த நியமனம் தொடர்பில் அரசமைப்புச்சபைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும்இடையே நிலவும்கருத்துவேறுபாடு காரணமாகவே ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆனால், பெரும்பாலான மக்கள் இந்தக் கொண்டாட்டக் காலத்திலும் கொண்டாட்ட மனோநிலையில் இல்லை. பொருளாதார நிலைமையே அதற்குக் காரணம். உழைப்புக்கும் பொருள்களின் விலைக்கும் இடையேமலைக்கும்மடுவுக்குமான வித்தியாசம் இருக்கும்போது பொது மக்களால் எப்படிக் கொண்டாட்டங்களில்ஈடுபடமுடியும். கிறிஸ்மஸ்தினத்தன்றுவழக்கமான பட்டாசு வெடிகளைக்கூடக் காண முடியவில்லை. அயலவர்களையும் சக மனிதர்களையும் நினைத்துக் கொண்டாட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று தேவாலயங்கள் மக்களை வழிப்படுத்துகின்றன.

கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்கு முடியவில்லையே என்கிற கவலையில் மட்டக்களப்பில் ஒருவர் தற்கொலைக்கு முயன்றார் என்றுவேறுசெய்திகள்வந்திருந்தன. பொருளாதார நலிவு ஒரு பக்கம் என்றால்பனையால்விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப் போன்று வெள்ளமும் பல இடங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து நல்லநாள், பெருநாளிலும் இடைத்தங்கல் முகாம்களில் அல்லல்படுகிறார்கள்.

இப்படிப் பொ-துமக்கள் துன்பத்தையும் துயரத்தையும் சுமந்துகொண்டு அல்லாடுகிறார்கள் என்றால், மக்களின் பிரதிநிதிகள் என்ன செய்வார்கள்? அவர்கள் துன்பப்படும் மக்களோடு மக்களாக நின்று துயர் துடைக்கப் பாடுபடுவார்கள், மக்களைக் கொஞ்சமாவது மகிழ்ச்சிப்படுத்த முனைவார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள். அப்படியெல்லாம் எதுவுமில்லை என்பதுதான் உண்மை. ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் ஒ-ரு சில நாட்களைச் செலவிட்டார்கள்.

அப்படியென்றால் மற்றவர்கள் எல்லாம் என்னவானார்கள் என்ற கேள்வியை நீங்கள் எழுப்புவது கேட்கிறது. அவர்களில் 20 பேர் ஏற்கனவே வெளிநாடுகளுக்கு சுற்றுலா போய்விட்டார்கள். நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதம் நவம்பர் 13 நிறைவடைந்தது. இனி மீண்டும் ஜனவரி 9 தான் நாடளா-மன்றம் கூடும். அதற்கிடையில் இருக்கும் ஒரு மாத காலத்தை தமக்கான விடுமுறையாக எடுத்துக்கொண்டு தமதுகுடும்பங்களுடன்கொண்டாடக் கிளம்பிவிட்டார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

வெளிநாடுகளில் படிக்கும் தமது பிள்ளைகளைப் பார்த்து வருவது, குடும்பங்களுடன் சுற்றுலாச் சென்றுவருவது என்று கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிவிட்டார்கள். இப்போதும் 20 பேர் வெளிநாடுகளில் உல்லாசப் பயணத்தில் மூழ்கியுள்ளார்கள் என்கின்றன நாடாளுமன்றத் தகவல்கள். அது மட்டுமல்ல, உள்நாட்டிலேயே இந்த ஒரு மாத காலத்திற்குள் 100க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நுவரெலியாவுக்குச் சுற்றுலா செல்கிறார்கள். அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உல்லாச விடுதிகள் இருக்கின்றன.

நவம்பர் இறுதி வாரத்தில் இருந்து ஜனவரி முதலாம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இந்த உல்லாச விடுதிகளின் அறைகள் நூற்றுக்கும்மேற்பட்டநாடாளுமன்ற உறுப்பினர்களால் அவர்களதும் குடும்பத்தினரதும் சுற்றுலாவுக்காக 'புக்'செய்யப்பட்டுள்ளனஎன்கின்றன நாடாளுமன்றச் செயலகத் தகவல்கள்.

ரோம்தீப்பிடித்துஎரிந்தபோதுபிடில் வாசித்துக்கொண்டிருந்தானாம் நீரோ மன்னன் என்று கேள்விப் பட்டிருக்கின்றோம். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல் அதற்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல. நாம் செய்த புண்ணியத்தால் நமக்குப் பிரதிநிதிகளாக இவர்கள் வாய்த்தார்கள்......

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிறு, நடுத்தர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ். வணிகர்கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறிய நடுத்தர வர்த்தகக் கண் காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:

இந்தியாவைப் பொறுத்தவரை சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் பொருளாதார அபிவிருத்தியில் 40 வீதமான பங்களிப்பைச் செய்கின்றார்கள். அதேபோல் ஏற்றுமதியில் 50 வீதமானவை சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களினாலேயே இடம்பெறுகின்றது. அது மட்டுமன்றி வேலைவாய்ப்பு வழங்குவதிலும் இவர்களே முன்நிலையில் உள்ளார்கள்.

அதுபோன்றே இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்கு வடக்கு மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் கணிசமான பங்களிப்பைச் செய்யும் வகையில் தமது உற்பத்தியின் தரத்தை மேப்படுத்தவேண்டும். இதற்கு இந்தியா அதற்கான உதவிகளைச் செய்யமுடியும்.

பொருளாதாரஉற்பத்தியில்சரியான நடைமுறைகளைப் பின்பற்றித் தர நிர்ணயத்தில் ஈடுபடுவதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்திக்கொள்ளமுடியும் இந்த கண்காட்சியில் 140 மேற்பட்ட விற்பனை காட்சிக் கூடங்கள் காணப்படுகின்றன.

இவை இன்னும் தரமாக கவர்ச்சிகரமாக இருக்கும்போது இந்தியாவிற்கோ ஐரோப்பாவிற்கோ தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும்போது பொருளாதார அபிவிருத்தியைப் பெற முடியும். இந்தகைய கண்காட்சிகளை தொடர்ச்சியாகமேற்கொள்ளும்போது தொடர்பாடல்கள் அதிகரிக்கும் - என்றார்.

யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் தனது உரையில் தெரிவித்ததாவது:

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை அடுத்த கட்டத்திற்குக்கொண்டுசெல்வதற்கும் வடக்கில்உள்ளஉற்பத்தியாளர்களை ஏனையவர்கள் அடையாளம் கண்டுகொள்வதற்குமாக இந்தக் கண்காட்சி ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளது.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானது. இந்த முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இந்தியா உதவி செய்யவேண்டும்.

இந்தியாவின் உதவி தேவையானவர்கள்வணிகர்சங்கத்தையோ இந்திய துணைத் தூதரகத்தையோ தொடர்புகொள்ள முடியும். இந்தக் கண்காட்சியைஒவ்வோருவருடமும் நடத்துவதற்கு எண்ணியுள்ளோம் என்றார்.

## நீரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலப்பிட்டிய வைத்தியசாலையில் ஒன்பது நாட்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும்நேற்றுஅவர்உயிரிழந்தார்.

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு இலங்கையைத் தாக்கிய சுனாமி எனப்படும் ஆழிப் பேரலையால்ஏற்பட்டமொத்தஇழப்பு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

31,000 பேர் உயிரிழக்கவும் சுமார் 4000 பேர் காணாமல் போகவும் காரணமான இந்தச் சுனாமி ஏற்பட்டு 19 ஆண்டுகள் ஆகின்றன.

மீண்டும் சுனாமி ஏற்பட்டால் மக்களை வெளியேறுமாறு எச்சரிக்கும் வகையில் சுனாமிக் கோபுரங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்தது. வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட இந்தக் கோபுரங்களில் பெரும்பாலானவை தற்போது செயலிழந்து விட்டது. சுனாமி ஏற்பட்டு 19 ஆண்டுகள் ஆன நிலையில், 77 எச்சரிக்கைக் கோபுரங்களில் 57 கோபுரங்கள் செயலிழந்துவிட்டன.

இதேவேளை, சுனாமி போன்ற பேரிடர் ஏற்பட்டால், மக்கள் வெளியேற்றப்பட வேண்டியிருந்தால், கையடக்கத் தொலைபேசி மற்றும் தரைவழி தொலைபேசிகள்ஊடாகசெய்திகளை வழங்கும் முறைமை நேற்று முதல் ஆரம்பிக்கப்படுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## இரட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவிக்கவில்லை.

சந்தேகநபரிடம்இருந்து9மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி மற்றும் பல தோட்டாக்களையும் தாம் கைப் பற்றினர் என்று கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டநபரிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இரண்டு வர்த்தகர்களை கொலை செய்வதற்கான ஒப்பந்தத்தை அவர் பெற்றுள்ளமை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். தான் ஹினடியன மஹேஷ் என்ற பாதாளக் குழுத் தலைவரின் நெருங்கிய சகா எனவும் அவரே பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

## கதிர்காம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதமும்கடைசிஞாயிற்றுக்கிழமை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் முன்னிலையாக வேண்டும் என்ற நிபந்தனையின் கீழும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

## போதகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர் தொடர்பில் சர்வதேச அரசியல் மற்றும் மத ஒருமித்த சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் எனத் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்தபோது இந்தக் குற்றச்சாட்டுக்குள்ளான ஜெரோம் நாட்டுக்குள் வரும் முன்னர்முன்பிணைபெற்றிருந்தார். எனினும் அவரை விசாரணைக்கு அழைத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தனர்.

போதகர் ஜெரோமினதும் அவரது மனைவியினதும் வங்கிக் கணக்குகளில் இருந்த பெருந் தொகைப் பணத்துக்கான வருமான மூலங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஜெரோம் மீது குற்றச்சாட்டுக்களைச்சுமத்தியுள்ளது.

# உடுத்துறையில் ஒதுங்கிய விசித்திரமான கடற் கலம்

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்கரையில் புதன்கிழமை கப்பல் போன்ற அலங்கரிக்கப்பட்ட உருவத்துடன் இரதம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இது மியன்மார் நாட்டில் திருவிழா நிகழ்வுகளில் பயன்படுத்து-வதற்காக வடிவமைப்படும் இரதம் எனக் கூறப்படுகிறது.

இருப்பினும் இது எவ்வாறு வந்தது, இது உண்மையிலேயே என்ன என்ற விடயங்கள் இதுவரை வெளியாகவில்லை. (05)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தினார் தனது பணிக் காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புகின்றார். அதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது தூதுவரிடம் தான் தெரிவித்த விடயங்கள் குறித்து இரா. சம்பந்தன் தெரிவித்ததாவது:

இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம். அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம்.

இலங்கையில் அமைதியையும், நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் தெரிவித்தேன்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும். இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன்.

வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால மற்றும்குறுகியகாலப்பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் தெளிவுபடுத்தினேன்.

எனதுகருத்துக்களைநியூசிலாந்து தூதுவர் ஏற்றுக்கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர், அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்குத் தான் நேரில் பயணம் செய்துபலதரப்பினரையும்சந்தித்துப் பேசினார் எனவும் அவர் என்னிடம் கூறினார். இலங்கைக்கும், இங்கு வாழும்அனைத்துஇனமக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார் -- என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டதா இல்லையா என்பதை சரிபார்க்க அதற்கான உடனடிப் பதில் அனுப்பப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

புதிய அலைபேசிகள் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவது அவசியம் என்று கூறிய பத்திரனே, நுகர்வோர் எதிர்கொள்ளும் எதிர்கால பிரச்சினைகளைத்தவிர்க்கசரிபார்ப்பு செயல்முறை உதவும் என்றும் கூறினார்.

## சூரிய மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறவைகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றன.

யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் நிர்வாகஇயக்குனர்வி.கே.விக்னேஷ் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய தீவுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையங்களை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசு 11 மில்லியன் டொலர் மானியம் வழங்கியுள்ளது.

யாழ். குடாநாட்டின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு மின்சாரம் வழங்கும் நோக்கத்திற்காக இந்திய அரசு இந்த உதவியைச் செய்கிறது.

இதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய ஒப்பந்ததாரர்கள்மட்டுமேஏலங்களை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்தின் முக்கிய சுற்றுலாப் பகுதிகளுக்கும், பருவக்காலத்துக்கு புலம் பெயர்ந்துவரும் பறவைகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். ஆனால், அவர்கள் அடையாளம் கண்டுள்ள பகுதிகள் குறித்து சில கவலைகள் உள்ளன. இது புலம்பெயர்ந்துவரும் பருவக்கால பறவைகளின் வருகையை சீர்குலைக்கும் திட்டத்தின் தொடக்கமாக இருக்கும். அம்பாந்தோட்டை விமான நிலையத்துக்கும் இதுதான் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறோம். இவர்கள்அடையாளம்கண்டுள்ளபல இடங்கள்சுற்றுலாமையங்களாகும்.

பூநகரி பகுதியிலிருந்து புத்த ளம் பகுதி வரை அழகான கடற்கரைகளைக் கொண்டுள்ளன. எனவே, இந்த புதுபிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் காற்றாலைகள் அந்தப் பகுதிகளைக் கைப்பற்றப் போகிறது என்றால், அந்த அழகிய நிலப்பரப்புகளை விளம்பரப்படுத்துவது மிகவும் கடினம்.

கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை பொருளாதார வளர்ச்சியின் அடுத்த கட்டமாகவும் தேவையாகவும் கருதுகின்றனர். இது இன்றியமையாத ஒன்றாகும். அதனால் அவர்கள் திட்டத்தை மாற்றியமைக்கவேண்டும்அல்லது நிறுத்த வேண்டும்.

மேலும், காற்றாலைகள் கிராமங்களின் முழு அமைப்பையும் பாதிக்கும் என்பதால் கிராம மக்களும் திட்டத்தால் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன. நாடு பாரிய மின்சாரப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதால் நாட்டிற்கு நிலையான எரிசக்தியை வழங்க முடியும்.

மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நமது பங்களிப்பு இதன் மூலம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். குறைந்தபட்சம், கடலோரப் பகுதிகளைச் சுற்றியுள்ள பரந்த வளங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும். இருப்பினும் அவை பொருத்தமான ஏனைய அபிவிருத்திக்கு வளமான பகுதிகளைத் தவிர்த்து மேற்கொள்ளப்படவேண்டும்என்றும் அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# தரக்குறைவான ஊசி, சரியான சிகிச்சை இன்மை இவையே சுபீனா உயிரிழப்புக்கான காரணங்கள்

## சகோதரி பரபரப்புக் குற்றச்சாட்டு

தரமற்ற ஊசியை செலுத்தியதாலும் சரியான முறையில் சிகிச்சை வழங்காததாலுமே தனது தங்கை உயிரிழந்துள்ளார் என உயிரிழந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவியின் உடன் பிறந்த சகோதரி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவி குணரத்தினம் சுபீனா, உடல் சுகவீனம் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம்போதனைவைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் கடந்த 23 ஆம் திகதி இரவு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கயிலேயே மேற்படி மாணவியின் சகோதரி இவ்வாறு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று தங்கச்சிக்கு உடல் டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மருத்துவர் பார்வையிடுவதற்கு வரும்போது வாந்தி காணப்பட்டதால் அதற்கு ஓர் ஊசி போடுமாறு தாதியருக்குக் கூறினார்.

இந்நிலையில், குறித்த ஊசியைத் தாதியர் ஏற்றிவிட்டு போகும்போது மூச்சுத் திணறல், தலைவலி என்ற எனது தங்கை துடித்துள்ளார். இந்நிலையில் அந்த ஊசி மருந்துக்கு எதிரான தடுப்பு மருந்து ஒன்றை கொடுத்துவிட்டு அவசர சிகிச்சை பிரிவுக்கு கொண்டுசென்றனர். அதன்பின்னர் செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது.

பின்னர் மருத்துவர் வந்து 'இதே ஊசி ஏனையோருக்கும் ஏற்றப்பட்டது. ஆனால் உங்களது தங்கச்சிக்கு தான் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. ஒவ்வாமை ஏதாவது இருக்கிறதா' என்று கேட்டார். ஆனால் ஏற்கனவே வைத்தியசாலையில் பதிவுகள் மேற்கொள்ளும் போது ஒவ்வாமை எதுவும் இல்லை என்று கூறினோம். பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பவுள்ளதாகக் கூறினர். பின்னர் தெல்லிப்பழை வைத்தியசாலையின் எந்தவிதமான ஆவணங்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படாமலேயே தங்கச்சியை அனுப்பிவைத்தனர்.

இதயத்தைத் தொழிற்பட வைப்பதற்காக கழுத்துக்கு கீழ் பகுதியில் இருந்து துளை யிட்டார்கள். ஏனென்றால் இதயத்தின் தசைநார்கள் இறுகிவிட்டன. ஆகையால் உடல்பாகங்களுக்கு இரத்தம் செல்ல வில்லை. முகம் வெளிறி, கால்கள் மஞ்சள் நிறமாக மாற்றமடைந்தது.

பின்னர் இரவு என்னையும் எனது அம்மாவையும் அழைத்த வைத்தியர், ஏற்கனவே ஏற்றப்பட்ட ஊசியின் தாக்கத்தைத் தடுப்பதற்காக சிகிச்சைகள் வழங்கவுள்ளோம் என்றனர். இரவு எட்டு மணிக்குத்தான் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எந்தவிதமான மருந்துகளும் வைத்தியசாலையில் இல்லாதது போல எல்லா மருந்துகளும் எங்களையே வாங்கித் தருமாறு கூறினர். பின்னர் அடுத்தநாள் வைத்திய ஆலோசகருடன் பேசும்போது 90 வீதம் அபாய கட்டத்தில் இருந்து தற்போது 60 வீதம் நிலைமைகள் சீருக்கு வந்துள்ளன. ஆகையால் பயப்படத் தேவையில்லை என்று கூறினார்.

பின்னர் திடீரென செயற்கையாக இதயத்தைத்தொழிற்படவைக்கும் மருந்தைக் குறைத்தனர். இவ்வாறு குறைத்ததால் மூன்று மணித்தியாலத்தில் திரும்பவும் அபாய கட்டடத்திற்கு எனது தங்கச்சி சென்றார். இதன்போதே ஏதாவது எனது தங்கச்சிக்கு நடந்துவிட்டதாகத் தெரியவில்லை. எனது தங்கச்சிக்கு ஏற்கனவே போட்ட ஊசி என்ன என நான் வைத்தியரைக் கேட்டவேளை அவர் என்ன ஊசி என்று கூறவில்லை. கண்ணுக்கு பிளாஸ்டர் போட்டு ஒட்டி இருந்தனர்.

பின்னர் இரவு எங்களை அழைத்தவேளை நாங்கள் போய் பார்த்தோம் வென்டிலேட்டர் குழாயில் இரத்தம் காணப்பட்டது.

ஊசி ஏற்றுவதற்கு முன்னர் செவ்வாய்க்கிழமை பரிசோதனைகள் செய்யப்பட்டன. ஆனால் புதன்கிழமை பரிசோதனை செய்யவில்லை. ஏனென்றால் மெசின் பழுதாகி விட்டதாகக் கூறினர். இரத்த அளவீடு பார்க்காமல், குருதிச் சிறு தட்டுகளின் அளவு பார்க்காமல், டெங்கின் அளவுகள் பார்க்கால் எவ்வாறு ஊசியை ஏற்றினார்கள்? அத்துடன் ஏற்றப்பட்ட அந்த ஊசி தரக்குறைவான ஊசி என அழியமுடிகிறது. போடப்பட்ட ஊசியின் பெயரோ அல்லது அது தொடர்பான விவரங்கள் எவையும் பதிவுகளில் இடம்பெறவில்லை.

பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது ஊசியின் தாக்கத்தால் தான் எனது தங்கச்சி உயிரிழந்துள்ளதாக. எனவே இவ்வாறான இனி எந்த சம்பவங்களும் இனிமேல் நடக்கக்கூடாது. எனது தங்கச்சிக்கு நீதி வேண்டும். - என்றார். (05)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் தப்பி ஓட்டம்

தளுவ - நிர்மலபுர பிரதேசத்தில் நத்தார் விருந்தின்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் தாக்குதலுக்கு உள்ளான பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பின்னர அவர் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். நுரைச்சோலை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். (05)

# அரச சார்பற்ற அமைப்புக்களை கட்டுப்படுத்த புதிய சட்டமூலம்?

## அரசின் நோக்கம் குறித்து சிவில் சமூக அமைப்புக்கள் ஆராய்வு

அரச சார்பற்ற அமைப்புக்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண் காணித்தலுக்காக அரசாங்கம் புதிதாகக் கொண்டுவருவதற்கு முயலும் சட்டத்தின் ஆபத்தான தன்மை குறித்து அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்துள்ளனர்.

நாட்டில் இயங்கிவரும் சுமார் 40 இற்கும் மேற்பட்ட முன்னணி சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் கொழும்பில் அமைந்துள்ள ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் அரசசார்பற்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும், கண் காணிப்பதற்குமென அரசாங்கம் புதிதாகக் கொண்டுவருவதற்கு முயலும் சட்டம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இந்தப் புதிய உத்தேச சட்டத்தின் ஊடாக அரசாங்கம் அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களையும் ஒரே சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு முயல்வதாக சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படும் செயலகத்தின்கீழ் அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களும் பதிவுசெய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட்டு, பின்னர் அதனடிப்படையில் ஒரே கட்டளையில் அனைத்து அமைப்புக்களையும் அடிபணியச்செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதுமாத்திரமன்றி, அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான செயலகத்தில் பதிவுசெய்யும் பட்சத்தில், அந்தப் பதிவை குறித்த காலப்பகுதிக்கு ஒருமுறை மீளப்புதுப்பிக்க வேண்டியிருக்கும். எனவே, அரச தம்மை விமர்சிக்கின்ற, தமக்கு எதிராக செயற்படுகின்ற அமைப்புகளின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்காமல் விடக்கூடிய அல்லது திடீரென இரத்துச்செய்யக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த சிவில் சமூகப்பிரதிநிதிகள் அச்சம் வெளியிட்டனர்.

மேலும் அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டால், அதனூடாக அரசாங்கம் எத்தகைய ஒடுக்குமுறைகளைப் பிரயோகிக்கக்கூடும் என்பது பற்றியும் இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. அத்தோடு ஏற்கனவே சில அரச சார்பற்ற அமைப்புகளின் அலுவலகங்கள் முன்னறிவிப்பின்றி சோதனைக்கு உட்படுத்தப்பட்டமை, ஓரிரு அரச சார்பற்ற அமைப்புகளின் வங்கிக்கணக்குக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பணம் முடக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் பற்றியும் இந்தச் சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. (05)

# மன்னார், நானாட்டான் வீதியில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

மன்னார் நானாட்டான் - முத்தரிப்புத்துறை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மேலும் ஓர் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில் -

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முத்தரிப்புத்துறை கிராமத்தில் இருந்து நானாட்டான் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரண்டு இளைஞர்கள் பயணித்த நிலையில் குறித்த வீதியில் உள்ள வளைவு ஒன்றில் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட பாலத்தினுள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு, மற்றைய இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டதோடு உயிரிழந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# போதைக்கு அடிமையானோரே குடாநாட்டில் அதிகளவில் கைது

யாழ்ப்பாணத்தில் கைதானவர்களில் சுமார் 70 வீதமானவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்தமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 190 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களைப் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனையும் மேற்கொண்டனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையின் படி 190 பேரில் 125 பேர் போதைக்கு அடிமையானவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில், இவர்களில் சுமார் 25 பேரை நீதிமன்றங்களின் ஊடாக மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வத்தளையில் பிரபல வர்த்தகரின் துப்பாக்கி, தோட்டாக்கள் திருட்டு

*பிரபல வர்த்தகர் ஒருவரின் துப்பாக்கிமற்றும்தோட்டாக்கள் திருடப்பட்டுள்ளனனவத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*அனுமதிப்பத்திரம் கொண்ட துப்பாக்கியே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக வர்த்தகர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.*

*வர்த்தகர் உறங்கிக்கொண்டிருக்கும்போது அவரது படுக்கை அறையில் துப்பாக்கியை வைத்திருந்தார் எனவும், அந்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கி திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.*

*துப்பாக்கியுடன் 12 தோட்டாக்களும் திருடப்பட்டுள்ளன என விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

# 4,500 துப்பாக்கி ரவைகள் வலைஞர்மடத்தில் மீட்பு

முல்லைத்தீவு வலைஞர்மடம் பகுதியில் உள்ள வயல்காணி ஒன்றில் 4,500 துப்பாக்கி ரவைகள் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு வலைஞர்மடம் பகுதியில் கிறிஸ்தவ தேவாலய வீதியிலுள்ள வயல் காணி ஒன்றில் குறித்த காணி உரிமையாளர் காணியில் மண்ணை அகழ்ந்தெடுக்கும் போது ரி- 56 துப்பாக்கி ரவை பெட்டிகள் இருந்ததை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து, அப்பகுதியில் உள்ள கடற்படையினருக்குதகவல்வழங்கப்பட்டதையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் குறித்த சம்பவ இடத்திற்கு வருகைதந்து மேற்படி துப்பாக்கி ரவைகளை மீட்டெடுத்துள்ளனர்.

ரி-56 வகை துப்பாக்கி ரவைகள் அடங்கிய ஆறு பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 4,500 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி ரவைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகாரப் பகிர்வின் அவசியம்

ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் தேவையை வலியுறுத்திய கூட்டங்களிலும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்களிலும் அதிகாரத்தைப் பகிர்வதன் அவசியம் குறித்துக் கூறுகையில் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்தார்.

நாட்டின் ஒவ்வொரு பகுதிகளும் ஒவ்வொரு விதமான வளத்தைக் கொண்டிருப்பதால் அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு தனித் தனியான திட்டங்களே தேவை. அதற்கான அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலமே அதனைச் செய்ய முடியும். மலையகத்திற்குப் பொருத்தமான ஒரு திட்டம் வடக்கு கிழக்கிற்குப் பொருந்தாது என்பதைக் கவனத்தில்கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

பேச்சில் அவர் அப்படிக் கூறினாலும் அவரது செயல்களில் அதன் சாயல் எதுவும் இல்லை என்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது. அவரது ஆட்சியில் வடக்கில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள சூரிய மின்கல அபிவிருத்தி வடக்கின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுடன் பொருந்திப் போகவில்லை என்கிற குற்றச்சாட்டு எழத் தொடங்கியிருக்கின்றது. குறிப்பாக வடக்கில் சுற்றுலாத்துறை மையங்களாக எதிர்காலத்தில் வளரக்கூடிய தமையைக் கொண்டிருக்கும் இடங்களை இந்த சூரிய மின் உற்பத்தித் திட்டங்கள் கபளீகரம் செய்கின்றன என்று யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்திய நிதி உதவியில் நெடுந்தீவு, அனலை தீவு, நயினா தீவு ஆகிய இடங்களில் அமையவுள்ள சூரிய மின் உற்பத்தித் திட்டம் மற்றும் இந்தியாவின் கோடீஸ்வர தொழிலதிபரான அம்பானியின் நிறுவனத்தால் பூநகரியில் செயற்படுத்தப்படவுள்ள சூரிய மின்கலத்திட்டம் என்பனவற்றைச் சுட்டிக்காட்டி இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார் யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் சம்மேளன நிர்வாக இயக்குநர் விக்னேஷ்.

இந்தத் திட்டங்கள் வடக்கின் எதிர்கால சுற்றுலா மையங்களை அழிப்பதுடன் கிராமங்களின் முழு அமைப்பையும் மாற்றியமைக்கப் போகின்றன, மக்களுக்கும் இடைஞ்சலாக இருக்கப்போகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

''பூநகரி பகுதியிலிருந்து புத்தளம் பகுதி வரை அழகான கடற்கரைகளைக் கொண்டுள்ளன. புதுபிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் காற்றாலைகள் அந்தப் பகுதிகளைக் கைப்பற்றப் போகிறது என்றால், அந்த அழகிய நிலப்பரப்புகளை விளம்பரப்படுத்துவது மிகவும் கடினம்.

மேலும், காற்றாலைகள் கிராமங்களின் முழு அமைப்பையும் பாதிக்கும் என்பதால் கிராம மக்களும் திட்டத்தால் அதிருப்தி அடைந்துள்ளனர்'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தனது பூகோள அரசியல் நலன்கள் மற்றும் பொருளாதார நலன்களுக்காக கொழும்பு போடும் திட்டங்கள் வடக்கின் நிலைபேறான அபிவிருத்திக்கு எவ்வளவுதூரம் பாதகமானதாக அமையும் என்பதை விக்னேஷின் கூற்று எடுத்துக்காட்டுகின்றது. இதனாலேயே தமிழர்கள் உச்சப்பட்ச அதிகாரப் பகிர்வைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். பொருத்தமற்ற அபிவிருத்திகளைத் தமிழர் பகுதிகளில் திணிப்பதன் மூலம் கொழும்பு தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயல்வதைத் தடுப்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமாகின்றது.

அதைக் கொள்கையளவில் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டாலும் கொழும்பின் தேவை என்று வருகின்றபோது வடக்கு கிழக்கைப் பலியிடுவதற்கு அவரும் தயங்குவதில்லை என்பதையே அவரது செயல்கள் எடுத்துக்காட்டுகின்றன.



# மின் வாகனங்கள் உண்மையில் சுற்றுச் சூழலுக்கு உகந்தவையா?

**மேத்தா**



மின் வாகனங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பே சந்தைக்கும் அங்கிருந்து சாலைக்கும் வந்துவிட்டாலும், 2023ல் தான் அதன் தாக்கம் சாலைகளில் அதிகரிக்கத் தொடங்கியது.

மின் வாகனங்களின் பாவனையை ஊக்குவிக்கும் கொள்கையை நோக்கி இலங்கை அரசும் நகர்கிறது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயன்பாட்டுக்கு மின்சார பேருந்துகளை வாங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. ஏனைய வாகனங்களினதும் உதிரிப் பாகங்களினதும் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தாலும் மின்சார வாகனங்களின் உதிரிப்பாக இறக்குமதிக்குத் தாராளமாக அனுமதி வழங்கப்படுகின்றது.

இது மின்சார வாகனங்களின் பாவனையை ஊக்குவிக்கும் அரசின் கொள்கை மாற்றத்துக்கான வெளிப்படையான அடையாளம். அரசின் இந்தக் கொள்கை மூலம் சுற்றுச்சூழல் மாசைக் கொஞ்சமும் ஏற்படுத்தாத மின்சார முச்சக்கர வண்டிகள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் மின்சார வாகனங்களின் சாத்தியக்கூறுகளை அதிகரித்துள்ளது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுவதையும் இந்த நடவடிக்கை மேலும் நிரூபித்தது.

சோதனை மற்றும் முயன்று தவறுதல் செயல்முறைக்குப் பிறகு கண்டி நகரில் இந்தச் செயற்றிட்டம் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் முச்சக்கர வண்டிகளை உற்பத்தி செய்வதற்காக அவுஸ்திரேலிய பங்காளிகளுடன் சேர்ந்த சிட்ரோ லங்கா (Ceytro Lanka (pvt.) Ltd) என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் உருவாக்கப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சுக்கள், கண்டி ஏப்பிங் மால் மற்றும் தனியார் துறையின் சூழல் நட்பு சொகுசு விடுதிகள் இந்த நிறுவனத்தின் உற்பத்திகளை வாங்குவதற்கு ஆர்வம் காட்டியுள்ளன. அதனடிப்படையில் இந்த நிறுவனத்தின் சூழல்நேய முச்சக்கர வண்டிகள் இப்போது கண்டியையும் தாண்டி மற்றைய நகரங்களிலும் ஓடத் தொடங்கியுள்ளன.

தனியார் துறை தற்போது தீவு முழுவதும் மின்சார வாகனத் தொழில்நுட்பத்தில் அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது. இது எதிர்காலத்தில் மின்சார வாகனங்களின் வளர்ச்சிக்குப் பெருமளவில் கட்டியம் கூறிநிற்கின்றது.

மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியிருந்தாலும் அவை தொடர்பான முறைப்பாடுகளும் இருக்கவே செய்கின்றன. அவற்றின் சாதகமான அம்சங்களாக -மென்மையான இயக்கம், குறைந்த எரிபொருள் செலவு, வரிச் சலுகை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்பன பட்டியலிடப்படுகின்றன. அதேவேளை, வாகனத்தை சார்ஜ் செய்வது தொடர்பில் பலத்த சந்தேகங்கள் உள்ளன. கார் போன்ற வாகனங்களுக்கு 'ஏசி' சாக்கெட்டில் இருந்துதான் சார்ஜ் போட முடியும். அவ்வாறு செய்தால், 'சார்ஜ்' ஆவதற்கு மிகவும் தாமதமாகலாம். ஏன் கிட்டத்தட்ட 24 மணி நேரம்கூட தேவைப்படலாம்.

மின் வாகனத்தை தயாரிக்கும் நிறுவனங்களே, சுவரில் பொறுத்தும் சார்ஜர்களை இலவசமாக நிறுவித்தருகிறார்கள். இதன் மூலம் 'சார்ஜ்' செய்வது வேகமாக இருக்கும். ஆனாலும்கூட வாகனத்தின் பற்றரி 80 சதவிகிதம் 'சார்ஜ்'' ஆக குறைந்தது ஆறு மணிநேரம் ஆகும் என்கின்றனர்.

அதைவிட இலங்கையில் வீதிகளில் இன்னமும் 'சார்ஜிங்' நிலையங்கள் வரவில்லை. இதனால் இந்த வாகனங்களை நம்பி நீண்ட தூரப் பயணங்களைத் திட்டமிடமுடியாது.

வாகனங்களின் வகையைப் பொறுத்தவரை, நடுத்தரமான நிஸான் வகை எலக்ட்ரிக் கார்களின் விலை அதே பிராண்டின் உயர்தர பாரம்பரிய பெட்ரோல், டீசல் கார்களின் (ஐசிஇ வகை) விலையைவிட இது அதிகம். நான் இவ்வளவு பணம் கொடுத்து வாங்கினாலும், மிக நீண்ட தூர பயணங்களின் போது எனக்கு உதவாது என்றால் அதனை எப்படி நான் விரும்ப முடியும். ஏனென்றால் எலக்ட்ரிக் கார் - நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ தகவலில், ஒரு முறை முழுமையாக காரை சார்ஜ் செய்தால், 400க்கும் மேற்பட்ட கிமீ மைலேஜ் கொடுக்கும் - ஆனால் ஒரு முறை சார்ஜ் செய்தால் அதிகபட்சமாக 250 கிமீ தான் ஓடும் - இது, அதாவது யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டால் அதிகபட்சம் புத்தளம் வரைதான் பயணிக்க முடியும்.



இதற்கு மாற்று அமெரிக்காவில் பரிசோதிக்கப் படுகிறது. அங்குள்ள டெட்ராய்ட் நகரில் சோதனை முறையில் நடக்கும் ஒரு முயற்சியாக, சாலைகளின் மேற்பரப்பின் கீழ் வாகனங்களை

(11ஆம் பக்கம் பார்க்க..)



# கொழும்பு ஆமர் வீதி பாரிய தீ பரவல்: வர்த்தக நிலைய பொருள்கள் நாசம்

கொழும்பு ஆமர் வீதியின் கிரீன் லேனில் வர்த்தக நிலையம் ஒன்றில்பரவியதீகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் ஏற்பட்ட தீயால் அங்கிருந்த பொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன. தீயணைப்பு பிரிவினர் நான்கு தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆர்மர் வீதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கசிப்பு காய்ச்சிய மூவர் கோப்பாயில் கைது



யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சிய பெண் உள்ளிட்ட மூவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடம் இருந்து 44 லீற்றர் கசிப்பும் 70 லீற்றர் கோடாவும் கைப்பற்றபட்டுள்ளதுடன்மேலும்ஆறு மதுபானப் போத்தல்களும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் கைப்பற்றபட்டன.

மேலதிகவிசாரணைக்காகசந்தேக நபர்கள் மூவரும் கைப்பற்றப்பட்ட பொருள்களும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டனர்.(05)

# பொலிஸார் எனக் கூறி துணிகரக் கொள்ளை

வண்ணாத்தவில்லு எழுவன் குளம் பகுதியில் நபர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கி பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை கொள்ளையடித்த குழுவொன்றின் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வண்ணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் தம்மை பொலிஸார் எனக் கூறியே வேன் ஒன்றில் குறித்த நபரைக் கடத்திச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வருகிறது.

இந்தச்சம்பவத்துடன்தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் மூவரை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(05)

# சாவகச்சேரியில் பெருமளவான லேகியத்துடன் ஒருவர் கைது

*சாவகச்சேரி நகரப் பகுதியில் போதையூட்டும் லேகியத்தை விற்பனை செய்த ஒருவர் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இதன்போது அவரிடம் இருந்து 3 கிலோ 720 கிராம் லேகியம் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# செந்தமிழ் ஆகம மார்கழி பெருவிழா யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்









தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை முன்னெடுத்த மார்கழிப் பெருவிழா திங்கட்கிழமை இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. காலை, மாலை அரங்குகளாக மார்கழிப் பெருவிழாவில் திருமுறை விண்ணப்பம், சிறப்பு உரைகள், பட்டிமன்றம் உள்ளிட்ட தெய்வீக நிகழ்வுகள் இடம்பெற்றன. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றாலும் எந்தத் தேர்தலையும் எதிர்கொள்வதற்கு ஏதுவானவகையில்பரப்புரைகளைத் தொடங்குவதற்குக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் தனது தேர்தல் பரப்புரையை ஜனவரியில் தொடங்க உள்ளது. அந்தக் கட்சி ஏற்கனவே மாவட்டம் தோறும் பொதுக்கூட்டங்களை நடத்தி வருகிறது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஜனவரி 19 முதல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தொடர் கூட்டங்களை நடத்தவுள்ளது.

முக்கிய பொதுக்கூட்டத்தை முதலில்கொழும்பில்நடத்துவதற்கும் கட்சி தீர்மானித்துள்ளது, அதன் பின்னர்நாட்டின்ஏனையபகுதிகளில் மேலும்பலகூட்டங்கள்நடத்தப்படும்.

## லஞ்ச, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

புதிதாக இயற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு மூவர் பெயரிடப்படவேண்டும். ஆணைக்குழுவின் தலைவராக நாடாளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நீல் இத்தவெல நியமிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புச் சபை ஏற்றுக்கொண்டது. ஆனால் மற்றைய இரு உறுப்பினர்களுக்கான ஜனாதிபதியின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ள அது மறுத்துவிட்டது.

ஜனாதிபதி பரிந்துரைத்த இருவரின் பெயர்களை நிராகரித்தது மட்டுமன்றி தமது பரிந்துரையாக ஒரு மாதத்திற்கு முன்பு வேறு இருவரின்பெயர்களைஅரசமைப்புச் சபை அனுப்பியுள்ளது. ஆனால், அதனை ஜனாதிபதி இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஊழல்ஆணைக்குழுவின்நியமனம் தாமதமாகி வருகின்றது.

இன்னும், நியமனங்கள் வழங்கப்படாததால், புதிய ஊழல் தடுப்புச் சட்டத்தை முழுமையாக செயல்படுத்த முடியவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## பொலிஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



'யுக்திய சுற்றிவளைப்பு' நடவடிக்கையானஇதுநேற்றிரவுயாழ்.மைய பேருந்துநிலையத்தில்இடம்பெற்றது.

யாழ் பிராந்திய சரேஷ்ட போலீஸ் அத்தியகட்சகர் ஜெகத் நிஷாந்தவின் வழிகாட்டுதலில் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் கீழ் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையப் பகுதி மற்றும் யாழ். நகரப் பகுதி வர்த்தக நிலையங்களிலும் யாழ்ப்பாண பொலிசாரினால் மோப்ப நாய்களின் உதவியுடன் இந்தத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

முன்னதாக, யுக்திய சுற்றிவளைப்புக்கள் நேற்று முதல் மீண்டும் தொடங்கப்படுகின்றன என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் காலையில் அறிவித்தார்.

ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின்சொத்துக்களை அரசு சுவீகரிக்கும்வகையில்பொலிஸ்சட்டப்பிரிவின் ஊடாக பொலிஸ் சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்எனவும்பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.



# வெள்ளம் பாதித்த வன்னி மக்களுக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தால் உதவி







லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி 1 இன் ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றரின் துரித முயற்சியால் சர்வதேச லயன்ஸ் கழக எல்.சி.ஐ.எவ். நிதியத்திடம் இருந்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (32 லட்சத்து 50 ஆயிரம் இலங்கை ரூபா) நிதியுதவியில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பெருமளவில் வெள்ள அனர்த்த உலருணவுப் பொதிகள் செவ்வாய்க்கிழமை காலை கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

கிளிநொச்சி சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினர் ஆர்.ஜெயசுதர்சனின் துரித முயற்சியால் ஆளுநர் சர்வதேசத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தில் ஒரு குடும்பத்துக்கு 3 ஆயிரத்து 250 ரூபா பொதி படி 1000 பொதிகள் பொதியிடப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்துக்கு 500, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 350, மன்னார் மாவட்டத்துக்கு 150 என வழங்கப்பட்டன. இவை முறைப்படி வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸின் ஒழுங்கமைப்பின் ஊடாக அந்தந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் ஊடாகப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அந்தந்தப் பிரதேச கழகங்கள், லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர், ஆளுநர் சபை பிரதானிகள் ஊடாக வழங்கப்பட்டன. (05)

# 3 மாதங்களாக மின்சாரத்தை பாவிக்காதவர்கள் 30,000 பேர்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்

கடந்த மூன்று மாதங்களில் மின்சாரத்தைபயன்படுத்தாத 30,000 வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த இணைப்புகளில் வீடுகளும் வர்த்தக நிறுவனங்களும் அடங்குகின்றன என அவர் கூறினார்.

இவர்களில் வெளிநாடுகளுக்குச் சென்றமின்சாரபாவனையாளர்களும், மற்றொரு பிரிவினர் வசிப்பிடத்தை மாற்றியவர்களும் அடங்குகின்றனர் என அமைச்சர் தெரிவித்தார். (05)

# வீடொன்றின் அலுமாரிக்குளிருந்து யாழில் கசிப்பு போத்தல்கள் மீட்பு

## பெண் கைது

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் அலுமாரிக்குள்பதுக்கிவைக்கப்பட்டிருந்த கசிப்பு போத்தல்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டிற்கு விரைந்த பொலிஸார் வீட்டைமுற்றுகையிட்டு, சோதனையில் ஈடுபட்டனர் .

அதன்போது வீட்டினுள் இருந்த அலுமாரி ஒன்றினுள் இருந்து , 30 போத்தல் கசிப்பை மீட்டுள்ளனர். அதனை அடுத்து வீட்டில் இருந்த பெண்ணை கைதுசெய்த பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# அம்பாறையில் போதைப் பொருள் விநியோக முக்கியபுள்ளி கைது

*அம்பாறை பிரதேசத்துக்கு போதைப்பொருள் விநியோகித்ததாகசந்தேகிக்கப்படும்நபர் ஒருவர்போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*அம்பாறை நகருக்கு ஐஸ் கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)*




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# இலங்கை – பிரித்தானியாவுக்கு இடையிலான வர்த்தகப் பரிமாற்ற அளவு 1.9 வீதம் உயர்வு

இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு இடையில் 2022 ஜூலை - 2023 ஜூன் வரையான 12 மாதங்களில் இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி உள்ளிட்ட வர்த்தகப் பரிமாற்றத்தின் மொத்தப்பெறுமதி 1.4 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும்.

இலங்கைக்கும், பிரித்தானியாவுக்கும் இடையில் கடந்த 2022 ஜூலை - 2023 ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வர்த்தக மற்றும் முதலீட்டு செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு அந்நாட்டின் வணிகம் மற்றும் வர்த்தகத்துக்கான திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள தரவுப்பதிவிலேயே மேற்கண்ட விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தரவுகளின்படி இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுடன் (2023 ஜூன் மாதத்துடன்) முடிவுக்கு வந்த கடந்த 4 காலாண்டுகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் அடங்கிய மொத்த வர்த்தகப் பரிமாற்றத்தின் பெறுமதி 1.4 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் ஆகும். கடந்த 2022 இல் இரண்டாம் காலாண்டுடன் (2022 ஜூன்) முடிவுக்கு வந்த 4 காலாண்டுகளில் (2021 ஜூலை - 2022 ஜூன்) பதிவான இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பரிமாற்றுத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை 25 மில்லியன் ஸ்ரேலிங் பவுண், அதாவது 1.9 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 1.4 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களில் இலங்கைக்கான பிரித்தானிய ஏற்றுமதிகளின் மொத்தப்பெறுமதி 394 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும்.

2022 ஜூனில் முடிவுக்கு வந்த 4 காலாண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை இது 6.8 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. அதேபோன்று இக்காலப்பகுதியில் இலங்கையிலிருந்து பிரித்தானியாவால் செய்யப்பட்ட இறக்குமதிகளின் மொத்தப்பெறுமதி 973 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும்.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுடன் நிறைவடைந்த கடந்த 4 காலாண்டுகளில் (2022 ஜூலை - 2023 ஜூன்) பிரித்தானியாவின் 79 ஆவது மிகப்பெரிய வர்த்தகப்பங்காளியாகவும், 72 ஆவது மிகப்பெரும் பொருள்கள்சார் வர்த்தகப்பங்காளியாகவும், 83 ஆவது மிகப்பெரும் சேவை வழங்கல்சார் வர்த்தகப்பங்காளியாகவும் இலங்கை காணப்படுகின்றது. (05)

# மின் வாகனங்கள்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சார்ஜ் செய்யும் சுருள்களின் வலையமைப்பை ஏற்படுத்திப் பார்க்கிறார்கள். அதன் மூலம் மின் வாகனங்களை 'சார்ஜ்' செய்வதற்கான ஒரு புதிய வழியை கண்டுபிடிக்கும் முயற்சி இது. அதாவது அந்த சாலைகள் வழியாக ஒரு கார் இயக்கப்படும்போது அது தானாகவே 'சார்ஜ்' ஆகும் என்பதுதான் அது. ஆனால் அது போன்ற வசதிகள் இலங்கைக்கு வர இன்னும் எத்தனை தசாப்தங்கள் காத்திருக்க வேண்டும் என்பதைக் கூறமுடியாத வகையில்தான் எமது அரசியல் மற்றும் பொருளாதார நிலமைகள் இருக்கின்றன.

இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் இப்போதுதான் மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது என்றால் மேற்கத்திய நாடுகளில் இது ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டது. அதுமட்டுமல்ல அங்கு இந்த உற்பத்தித்துறை சரிவை நோக்கிச் செல்லவும் தொடங்கிவிட்டது.

2019 மற்றும் 2021க்கு இடையில், நிகோலா, ஃபிஸ்கர், ரிவியான் ஆட்டோ மோட்டிவ், லூசிட், என்ஜஓ, எக்ஸ்பெங்க், பொலெஸ்டர் ஆட்டோமோட்டிவ், கனூ மற்றும் லார்ட்ஸ்டவுன் மோட்டார்ஸ் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த சந்தை மூலதனம் சுமார் 470 பில்லியன். ஆனால், இப்போது, அது வெறும் 59 பில்லியன் டொலர்களாக உள்ளது. இது கிட்டத்தட்ட 87 சதவிகித சரிவு. அதிக லாபம் ஈட்டும் மின் வாகனத் தயாரிப்பாளர்களான டெஸ்லா, பிஒய்டி மற்றும் லீஓட்டோ ஆகியவை அதே காலகட்டத்தில் 1.4 டிரில்லியனில் இருந்து 900 பில்லியனாக மாறியிருக்கிறது. டெஸ்லா 2020ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிய 'மொடல்' எதையும் வெளியிடவில்லை.



### மின் வாகனங்களில் என்ன பிரச்சினை?

இலங்கை நுகர்வோர் சுற்றுச்சூழலைக் காட்டிலும் செலவிடும் தொகை மீதுதான் அதிக அக்கறை கொண்டவராக இருப்பர்.

மின் வாகன பற்றரியின் ஆயுள் 8 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காது. பெட்ரோல், டீசலில் இயங்கும் வாகனத்தை விட விலை அதிகம்.

வாகன பழுதுநீக்குதலுக்கான செலவும் அதிகம். எடுத்துக்காட்டாக, டாடா நெக்ஸான் மின் வாகனத்தின் பேட்டரியை மாற்றுவதற்கு ரூ.15 முதல் – ரூ. 20 லட்சம் வரை ஆகலாம்.

மின் வாகனங்கள் எல்லா நேரங்களிலும் சரியாகப் போவதில்லை. முதலில் வெளியான 'மொடல்'களுடன் மற்றதை ஒப்பிடுகையில் மிகவும் மோசமானதாகவே இருந்தது. இன்னும் வருங்காலத்தில் வாகன ஓட்டிகள் எதிர்பார்க்காத குறைபாடுகளும் ஏற்படலாம்.

வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்ய, மின் வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் தொடர்ந்து வாகனங்களின் தொழில்நுட்பங்களை மேம்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். இந்தச் செலவும் கார் உரிமையாளர்கள் தலையில் விழலாம்.

ஒரு மின் காரின் திறன் என்று தயாரிப்பு நிறுவனம் அளித்த தகவலுக்கும் உண்மையான மைலேஜுக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. குறிப்பாக அதிக எடையுள்ள உடைமைகளை ஏற்றினால் காரின் 'மைலேஜ்', கவலை தருவதாகவே உள்ளது.

மெர்செடீஸ் –பென்ஸ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இந்தியா நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில், மின் வாகனங்களை வாங்கும்போது அதிக தொலைவுப் பயணங்களுக்கு உகந்ததாக இல்லை என்பது மிகப்பெரிய தடை என்கிறார்.

ஒருபக்கம் பார்த்தால், மின் வாகனங்களும் சுற்றுச்சூழலுக்கு எதிரானவைதான். நிலக்கரி போன்றவற்றை எரிப்பதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைத்தானே இவை பயன்படுத்துகின்றன.

இந்த வகையில் பார்த்தால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாதவை என்ற நோக்கத்தையும் இவை தோற்கடித்துவிடுகின்றன. எனவே, மின் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமானால், மின் தேவை அதிகமாகும். மீண்டும் அது சுற்றுச்சூழலுக்குக் கேடாக மாறும்.

மின் வாகனங்ளில் உடனடி முறுக்கு விசை வேகமாக இருந்தாலும் – பெட்ரோல், டீசல் வாகனங்களைவிட விரைவாக மணிக்கு 1100 கிலோ மீற்றர் என்னும் வேகத்தை எட்டும் அதிக வேகத்தில் தொடர்ந்து இயக்குவது கடினம்.

மின் வாகனங்கள் ஆரம்ப நிலையில் இருப்பதால், பழுதுநீக்க பயிற்சி பெற்ற பணியாளர்கள் குறைவாகவே உள்ளனர்.

மின் வாகனங்களுக்கு சேவை மற்றும் உதிரி பாகங்கள் விலையும் அதிகம். மெக்கானிக்கல் மற்றும் பிரேக்டவுன் தொழில்நுட்பங்கள் இந்த வாகனங்களில் பெரும்பாலும் இல்லை. பழுதானால் உதிரிப் பாகங்களாகவே மாற்றவேண்டியிருக்கும். அவை செலவு பிடிப்பவை.

மின் வாகனங்களின் பயன்பாடு, மறுபக்கம் கார்பன்டை ஆக்ஸைடு எனும் கரியமில வாயு குறையவும் வழிவகுக்கும் என்று டாடா மோட்டார்ஸ் செய்தித் தொடர்பாளர் கூறுகிறார். ஆனால் மின் பற்றரியின் ஆயுள் குறைவாகவே இருக்கிறது.

ஒரு ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர் தலைமையில் நடந்த ஆய்வு, லித்தியத்தை வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் மாசுபாடு என்று முத்திரை குத்துகிறது. தாவரங்கள், உயிரினங்களில் லித்தியம் மாசுபாட்டின் அளவு அதிகரிப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுவரை பக்க விளைவுகள் பற்றித் தெரியவரவில்லை.

சில ஆண்டுகள் ஆனதும் பற்றரிகள் சக்தியை இழக்கும். ஓரிரு ஆண்டுகளில், ஒருமுறை சார்ஜ் செய்தால் 300 கிமீ தொலைவு செல்லும் வாகனம், பிறகு 150 கிமீ ஆகக் குறையும். பேட்டரி மாற்றப்படும் வரை இந்த திறன் தொடர்ந்து குறைந்து கொண்டே செல்லும்.

அறிவியலாளர்கள் நினைத்தால், ஆய்வுகளை மேம்படுத்தி விரைவில் லித்தியம்–அயன் பேட்டரிகளுக்கு மாற்று கண்டுபிடிக்கப்படலாம். வளர்ந்து வரும் ஹைட்ரஜன் தொழில்நுட்பம் ஒரு சிறந்த மாற்றாக இருக்கலாம்.

மின் வாகனங்கள் பசுமையை ஏற்படுத்து–வதற்கான ஒரே உபாயம் அல்ல. இப்படிச் சொல்ல முக்கிய காரணம் அதன் இதயம் போன்ற லித்தியம்–அயன் (Li‡ion) பற்றரி. அதனால் எழும் பிரச்சினை ஒன்றல்ல, இரண்டு. பற்றரி உற்பத்தியின்போது அதிக 'கார்பன்' பயன்பாடு மற்றும் பற்றரியின் வாழ்நாள் முடியும்போது அது மின் கழிவாக மாறுவது.

1991ஆம் ஆண்டு சோனி கார்ப்பரேனால் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, லிஅயன் பேட்டரிகள்தான் ஸ்மார்ட்ஃபோன் முதல் கார் வரை அனைத்தையும் இயக்குகின்றன.

இலங்கை தனது மொத்த லித்திய தேவைக்கும் ஆஸ்திரேலியா, அர்ஜென்டினாவிலிருந்து இறக்குமதி செய்கிறது. இது பூமியில் ஹைட்ரஜன், ஹீலியத்திற்குப் பிறகு அதிகமாகக் காணப்பட்டாலும் எளிதில் எடுக்க முடியாது. லித்தியத்தை பிரித்தெடுக்கும் செயல்முறைக்கு 10 முதல் 24 மாதங்கள் வரை எடுக்கும்.

ஒவ்வொருடன் லித்தியத்தையும் வெளியே எடுக்க, தலா 5 லட்சம் லிற்றர் நன்னீர் தேவைப்படுகிறது, நன்னீர் கஞ்சி போல குமிழியாக சுரங்கங்களில் செலுத்தப்படுகிறது, அது ஆவியாக திறந்த நிலையில் விடப்படும். ஆனால் விந்தையாக, இந்த சுரங்கங்கள் அர்ஜென்டினா, பொலிவியா மற்றும் சிலி போன்ற வறட்சி பாதிப்புக்குள்ளான பகுதிகளில் அமைந்துள்ளன. ஆவியாதல் முடிந்ததும் லித்தியம் வெட்டியெடுக்கப்படுகிறது. ஆனால், அதன் எச்சத்தில் உள்ள நச்சுப் புகை மற்றும் கழிவுகள் தானாக அழிய பல நூற்றாண்டுகள் எடுக்கும். இது பூமியில் ஊடுருவி, நிலத்தடி நீர், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும்.

லித்தியம் குறைவாகக் கிடைப்பதால், அது மின் வாகனங்களின் விலையை கூட்டுகிறது. இது குறித்து எலான் மஸ்க், எக்ஸ் பக்கத்தில், லித்தியத்தின் விலை பைத்தியக்காரத்தனமான நிலைக்கு சென்றுவிட்டது. டெஸ்லா நேரடியாக சுரங்கத்துக்குச் சென்றால்தான் செலவுகளை குறைக்க முடியும் என பதிவிட்டிருந்தார்.

மின் வாகன பற்றரியை மறுசுழற்சி செய்ய முடியுமா என ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ஆனால், தற்போதுவரை பற்றரிகள் நிலத்தில்தான் வீசப்படுகின்றன.

மறுபுறம், மின் வாகனங்கள் ஒரு கார்பன் மாசுபடுத்தியும் கூட. ஒரு யூனிட் ஆற்றலை உற்பத்தி செய்ய 150 கிலோ கார்பன்டை ஆக்ஸைடை வளிமண்டலத்தில் வெளியிடுகிறது. இது ஒரு மணிநேர பற்றரி ஆயுளுக்குத்தான் உதவும். இவ்வாறு கணக்கிட்டால், பெட்ரோல் அல்லது டீசல் கார் ஒட்டுமொத்தமாக வெளியிடுவது 710 டன் கார்பன்டை ஆக்ஸைடு மட்டுமே, இதுவே மின் வாகனம் என்றால் 1619 டன் கார்பன்டை ஆக்ஸைடு வெளியேற்றப்படுகிறது.

மற்றொரு தகவல் என்னவென்றால், உலகெங்கிலும் மின் கட்டமைப்புகளுக்கான எரிபொருளாக இருக்கும் நிலக்கரி பற்றியது. மின்சாரம் தயாரிப்பில் நிலக்கரி ஒரு முக்கிய காரணி, குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் நிலக்கரி மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இதுவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இல்லை.

இதுமட்டுமா, சாதாரண வாகனங்களைக் காட்டிலும் மின் வாகனங்களின் டயர்கள் அதிக எடைகொண்டவை. இதுவும் மக்காக் குப்பைதான். மண்ணில் நுழைந்து மனிதனைக் கொல்லும் சாபக்கேடு.

பற்றரிகளின் தொழில்நுட்ப குறைபாட்டால் தீப்பற்றும் அபாயம் ஏற்படுகிறது. பாதுகாப்பைத்தானே பலரும் கருத்தில்கொள்வார்கள். சில பற்றரி வாகனங்கள் தீப்பற்றி எரிகின்றன. காரணம் கண்டறியப்படாமல் உள்ளது. கடந்த காலங்களில் பல மோட்டார் வாகன தயாரிப்பு நிறுவனங்கள் இந்த காரணங்கள் மற்றும் அரிதான கோளாறுகளால் பொருளாதார இழப்புகளை சந்தித்துள்ளன. மின் வாகனங்களை வாங்கியவர்களும் கூட.

பெட்ரோல், டீசல் அல்லது மின்சாரத்தில் இயங்கும் வகையில் புதிய வாகன தயாரிப்புக்கான ஆய்வுகள் நடக்கின்றன. இதில், ஜப்பானும் சீனாவும் சபாஷ் சரியான போட்டி என்ற அளவில் இருக்கிறார்கள். அண்மைக் காலமாக சந்தையில் கணிசமான இடத்தை இந்த 'ஹைப்ரிட்' கார் விற்பனை பிடித்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் 2035க்குள் புதிய பெட்ரோல், டீசல் கார் விற்பனையை நிறுத்த திட்டமிட்டுள்ளது. அதேபோல், 2030க்குள் முழு இகார்களை அறிமுகப்படுத்த 'வொல்வோ' முடிவெடுத்துள்ளது.

தொழில்நுட்பங்கள் மேம்படும் போது, மின் வாகனங்களில் பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு மேலும் குறையும். மேலோட்டமாகச் சொன்னால் மின் வாகனம் காற்று மாசை குறைக்க உதவும், தேசிய அளவில் என்றால், இது நாட்டின் எரிபொருள் தேவையைக் குறைத்து அதன் மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதி கட்டணங்களை குறைக்கும் என்ற நம்பிக்கை எழுகிறது.

மின்சார வாகனங்களின் சாதக பாதகங்களை இங்கே அலசி ஆராய்ந்திருக்கிறோம். இதன் மூலம் வெறும் கண்–மூடித்தனமாக காற்றுமாசுபாடு என்ற ஒன்றை மட்டுமே பிடித்துக்கொண்டு தொங்கும் மின் வாகன விளம்பரங்கள், அனைத்து தொழில்நுட்பத்தையும் மேம்படுத்தினால், நாடும், வாகனத்தை வாங்குவோரும் பாதுகாக்கப்படுவார்கள். அதற்குரிய சரியான கொள்கைகளை தொடக்கத்திலிருந்தே அரசு சரியாக வரையறுக்கவேண்டும்.

**தி நியூ சன்டே எக்ஸ்பிரஸ்**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2023இல் வெளியிடப்பெற்றது.